**Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95**

**Date of Publication : 1st of Every month** **Date of Posting : 5th & 6th of Every month**

| | |
|---|---|
| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |

| | | |
|---|---|---|
| வேணு : 18 | மே 2013 | கானம் : 10 |




Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO SELF INTEREST NO NAME ONLY GOD

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை






| | | |
|---|---|---|
| வேணு : 18 | மே 2013 | கானம் : 10 |



பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்களின் அருளாசியுடன் கோவிந்தபுரத்தில் ஸ்ரீபகவந்நாம போதேந்த்ராள் ஔஷதாலய துவக்கம் - ஏப்ரல் 20






ஏப்ரல் 18 – நாகைநல்லூரில் ஸ்ரீராமநவமி உற்சவ துவக்கம்



ஏப்ரல் 11-19 – ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீராமநவமி உற்சவம் – ஸ்ரீமத்ராமாயண மூலபாராயணம்



மார்ச் 30 – மாங்காடு அருகே கொல்லாச்சேரி கிராமம் - 48 நாள் அகண்ட நாமகீர்த்தன பூர்த்தி

பெங்களூரு கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர்
கோவிலில் – பக்த விஜயம் உபன்யாசம்
– ஏப்ரல் 24–30










நியூசிலாந்து வெலிங்டன்
குறிஞ்சி முருகன் கோவிலில்
ஸ்ரீமத்பாகவத சப்தாஹம்
பூர்ணிமாஜி ஏப்ரல் 6 -13



BCAS session on Empathy and Anger management April 16, Mumbai by Ramanujamji



காவேரிப்பாக்கம் அழகிய
ராமர் கோவிலில் ஸ்ரீமத்
ராமாயண உபன்யாசம்
முரளிஜி ஏப்ரல் 16-23





பிப்ரவரி 26 - புதிய விருதுநகர் நாமத்வாரில்



ஏப்ரல் 22 - ஸ்ரீஸாந்தீபனி குருகுல வித்யார்த்திகளுடன் ஸ்ரீஸ்வாமிஜி
- மதுரபுரி ஆஸ்ரமம்

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 18 · மே 2013 · கானம்: 10

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**

| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் - 206 | 03 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 08 |
| பாகவத பழம் - 38 | 10 |
| கடவுள் ஏன் தோன்றுவதில்லை | 14 |
| அஹம்ஸ்புரணம் | 18 |
| ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 26 |
| ஆலய தரிசனம் | 29 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 33 |
| பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 38 |
| மாலே மணிவண்ணா | 40 |
| அப்பாலுக்கு அப்பால் | 42 |

**ஏகாந்தே சுகமாஸ்யதாம் பரதரே சேத: ஸமாதீயதாம்**
**பூர்ணாத்மா ஸுஸமீக்ஷ்யதாம் ஜகதிதம் தத்பாதிதம் த்ருச்யதாம்**
**ப்ராக்கர்ம ப்ரவிலாப்யதாம் சிதிபலாந் நாப்யுத்தரை: ச்லிஷ்யதாம்**
**ப்ராரப்தம் த்விஹ புஜ்யதாமத பரப்ரஹ்மாத்மநா ஸ்தீயதாம்**

– சோபானபஞ்சகத்தில் ஸ்ரீஆதிசங்கரர்

சுகமான ஏகாந்த வாழ்க்கையை நாடி, பரம்பொருளிடம் மனதை செலுத்து. ஆத்மா ஒன்றே, எங்கும் பரவி, எல்லாமாகவும் இருக்கிறது என்பதை அந்நிலையில் பார். ஆத்மாவே எல்லாமாக இருப்பதனால், இந்த பிரபஞ்சமும், அதன் பலவித பொருள்களும் வெறும் தோற்றமே என்பதை நன்கு அறிந்து கொள். அந்த தெளிவின் பலத்தினால், முன்வினைகளை அழித்து விடு. புதிதாக கர்மமூட்டையை சேர்க்காமலிரு. இப்பிறவியின் சுக துக்கங்களை சமமாக ஏற்று அனுபவித்து விடு. உயர்ந்த ஆத்மானுபவத்திலேயே இருந்து கொண்டு, ஆனந்தமாயிரு.

Please Renew Subscription to Madhuramurali

# ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் மீது கீர்த்தனம்

முந்தை வினைகளை முடித்து வைக்கும்
முகுந்தனின் தூதர் நம் ஸ்வாமிஜி

பிந்தைய வாழ்வினி பிசகின்றி நடந்தேற
பிரேமிகவரதன் தந்த புண்ணியர் ஸ்வாமிஜி

நாமகீர்த்தனங்கள் நாடோறும் ஒலித்திடவே
நாதமுனி தந்த நன்மணி நம் ஸ்வாமிஜி

பார்வையிலும் ஸ்பரிசத்திலும் பார்த்தனின் கருணையுண்டு!
கார்த்திகை விளக்கொளியாய் காலமெல்லாம்
பொலிவுமுண்டு!

கீதையில் கண்ணனென தூய்மையில் ராமனென
ஜாடையாய் ஜனித்தவர் நம் ஸ்வாமிஜி

வாழ்நாளில் இவரோடு வாழ்ந்திருப்போம்!
தாள் பணிந்து தவமிருப்போம் தாசானுதாசனென!

ராதே கிருஷ்ணா!

- கோபிசெட்டிபாளையம் திரு.கோவிந்தராஜன்




முன் அட்டை – ஏப்ரல் 28, GOD India டிரஸ்டின் ஆண்டு விழா – பெங்களூரு மல்லேஸ்வரத்தில் நகரசங்கீர்த்தனம் – ஸ்ரீஸ்வாமிஜியுடன் அன்பர்கள்
பின் அட்டை – ஏப்ரல் 24–30 பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில்



Please Renew Subscription to Madhuramurali

# மதுரமான
# மஹனீயர் - 206

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

எல்லா நாட்டவருக்கும், எல்லா மொழியினருக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும், பல்வேறு பாகுபாடுகளையும் தாண்டிய நன்மை தரக்கூடிய வழி ஒன்றை காட்ட வேண்டும். வன்முறை என்பது மறைந்து அன்பு மயமான மகிழ்ச்சி நிரம்பிய ஒரு சமுதாயம் நிலவ வேண்டும். மக்களின் தர்மமான பிரார்த்தனைகள் நிறைவேற வேண்டும். அத்யாவசிய தேவைகளும், மழை போன்ற இயற்கை வளங்களும், குறைவின்றி இருக்க வேண்டும். அமைதி பூங்காவாக உலகம் இருந்திடல் வேண்டும். இதனுடனே மக்கள் இறைவனை அடைய சுலப வழி ஒன்றையும் ஸ்தாபிக்க வேண்டும். இவை எல்லாம்தான், நம் குருநாதரின் ஆசை. அதற்காக அவர் சங்கற்பித்து கொண்டு தோற்றுவித்ததுதான் நாமத்வார்.

அப்படி நமது குருநாதர் எங்ஙனம் ஆசைப்பட்டாரோ, அங்ஙனமே தமிழகத்தில் பதினேழு இடங்களிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் மற்றும் உலகெங்கிலும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் என்று ஒவ்வொரு தேசமாக நாமத்வார் மையங்கள் அமைந்து மக்களுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தந்து வருகின்றன. அங்கு வரும் மக்கள் பலவிதமான பிரார்த்தனைகளை செய்து பயன் பெறுகின்றனர். இப்படி எங்கெங்கோ இருக்கும் அன்பர்களின் பிரார்த்தனைகள் மூலம் அவரவருக்கு தேவையானது கிடைத்து விடுகிறது.

எந்த ஜீவனை பகவானும் குருவும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றனரோ, அந்த ஜீவனை நாமத்வாருக்குள் இழுத்துக் கொள்கிறார் என்று சொன்னால், அது சரியாக இருக்கும். நாமத்வார்களில் வீற்றிருக்கும் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரத திவ்ய தம்பதிகளுக்கு பூஜையும்



Please Renew Subscription to Madhuramurali

ஆராதனையும் அழகாக நடைபெற்று வருகிறது. அவன் ஆசைப்படும் சிறந்த ஆராதனை நாமகீர்த்தனமும், பக்தர்களின் சத்சங்கமும், கதாசிரவணமும்தானே? அதனுடன் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்பது போல நாமத்வார் அன்பர்கள் சமூக சேவையில் ஈடுபட்டு வருவதும் ஒரு விசேஷம்.

இந்த நாமத்வார் மையங்களில் ஏற்படும் அனுபவங்களை, அவ்வப்பொழுது, நாமத்வார் இணையதளம் வெளியிட்டு வந்தாலும் அது எண்ணிக்கையில் மிக மிக சிலவே என்பது குறிப்பிடத்தக்கது. நாமத்வாருக்கு வருகை தரும் ஒவ்வொரு அன்பருமே தனது அனுபவத்தை கூற முடிவு செய்தாரே எனில், அது முடிவற்றதாகி விடும். இருப்பினும் அதில் புதிதாகவும், அதிக சுவை கூடியதாக இருப்பதையும், அவ்வப்பொழுது ஸ்மரிப்பது இனிமையாக இருக்கும்.

சிங்கப்பூர் அன்பர் ஒருவரின் உரிய அனுமதி பெற்றபின், சிங்கப்பூர் நாமத்வார் தலைவர் திரு.பாலசுப்ரமணியன் பகிர்ந்து கொண்ட, குருநாதரின் மஹிமை குறித்த ஒரு ஆச்சரியமான விஷயத்தைதான் இங்கு பார்க்க போகிறோம்.

இரண்டு சகோதரிகள் உடைய, நல்ல கடவுள் நம்பிக்கை உள்ள, சிங்கப்பூர் இளைஞர் ஒருவரின் தந்தைக்கு புற்று நோய் கண்டு சிகிச்சை நடைபெற்று வந்தது. அதனால், அவ்விளைஞர் வேலைக்கு போக வேண்டிய மிக அவசிய தேவை ஏற்பட்டு இருந்தது. அவர் வேலைக்காக பல முயற்சிகள் செய்தும், வேலை கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்திருக்கிறார்.

பகவான்தான் ஒருவரை எடுத்துக் கொள்ள தீர்மானிக்கிறான் என்பதை நிரூபிக்கும் வகையில் அவருக்கு ஒரு கனவு ஏற்பட்டது. கனவில் நம் குருநாதர் தோன்றி இருக்கிறார். அதில், தனது வீட்டின் அருகே ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பிரகாசமாக தோன்றி நிற்பதாகவும் அவருடைய வதனங்களில் ஒரு விவரிக்க இயலாத கருணை பொருந்திய புன்முறுவலையும் கண்டிருக்கிறார் அந்த இளைஞர். அவருக்கு மிக பரவசமாக போய்விட்டது. "வருவாய் வருவாய் குருநாதா" என்று பாடி



Please Renew Subscription to Madhuramurali

அழைப்போர் மத்தியில், அழையாமல் ஒருவர் கனவில் குருநாதர் செல்கிறார் என்றால் விசேஷ கருணைதானே? அது மகிழ்ச்சியாய் இருந்தாலும், அக்கனவை அவர் பெரிதாக நினைக்கவில்லை. கனவுதானே இது! என்று நினைத்து, அவர் அதை மறந்து விட்டார்.

நினைக்கவே இனிக்கும் இக்கனவை தொடர்ந்து, மற்றொரு கனவும் அவருக்கு வந்தது. அதில் மறுபடி குருநாதர் தோன்றினார். ஆனால், இம்முறை அவரது வீட்டினுள்ளேயே பிரகாசமாக இருப்பதாக தோன்றினார். அந்த இளைஞர் குருநாதரை பற்றி தொலைக்காட்சிகளில் பார்த்து, கேட்டு, குருநாதரின் அருளுரைகளை ரசித்திருக்கிறார். அதனால் வந்தது குருநாதர்தான் என்று அவருக்கு தெரியும். மீண்டும் மீண்டும் கனவில் குருநாதர் வரவே அவருக்கு "என்ன இது. இந்த ஸ்வாமிகள் சிங்கப்பூருக்கே வந்து விட்டாரா?" என்று சந்தேகம் கொண்டார். இம்முறை அவரால் கனவை அலட்சியம் செய்ய இயலவில்லை. அந்த இளைஞர் இணையதளத்தில் விவரங்களை தேடினார். விவரங்களை கண்டுபிடிக்க, அவருக்கு கஷ்டம் ஒன்றும் இருக்கவில்லை.

"குருநாதரின் அந்தரங்க செயலாளர் திரு.பாக்யநாதன், மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுடன் ஒரு திவ்ய சன்னிதியான நாமத்வாரை, கடந்த நவம்பர் 8, 2012 அன்று குருநாதரின் ஆசிகளுடன் கோலாகலமாக, செரங்கூன் ரோடில், ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலுக்கு எதிராக, திறந்து வைத்து இருக்கிறார். அன்று சிங்கப்பூரில் நல்ல மழையும் இருந்து பகவான் நாமத்வார் அமைந்தது தனக்கு மகிழ்ச்சி என்று தெரியப்படுத்தி இருக்கிறான்" என்று தெரிந்து கொண்டார் அவ்விளைஞர்.

நாமத்வார் தலைவர் திரு.பாலசுப்ரமணியன் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு நாமத்வார் குறித்த விவரங்களையும் தெரிந்து கொண்டார் அந்த இளைஞர். தனது பிரார்த்தனையையும் தெரிவித்து கொண்டார் அவர்.



Please Renew Subscription to Madhuramurali

அந்த இளைஞர், நாமத்வாருக்கு நேரில் வர ஆசைப்பட்டார். ஆனால் அப்படி அவர் வருமுன்னரே, அவருக்கு வேலை கிடைத்து, முதல் சம்பளமும் வாங்கிவிட்டார். குருநாதர் தரிசனம் தந்து இருக்கிறாரே? அந்த அருளின் முன் எதுதான் தடையாக இருக்கும்? நாமத்வாருக்கு அந்த இளைஞர் அவருடைய அன்னையுடன் வந்தார். அவர்கள் கைகளில் இனிப்புகளும் பழங்களும் மலர்களும் இருந்தன. அவற்றை அவர்கள் பக்தியுடன் நாமத்வாரில் பகவானுக்கும் குருநாதருக்கும் சமர்ப்பித்தனர். தனக்கு வேலை குருநாதரின் அருளால்தான் கிடைத்தது என்று, தீர்மானமாக உணர்ந்திருந்தார் அந்த இளைஞர். அதனால், முதல் சம்பளம் வாங்கிய உடனேயே நாமத்வாருக்கு வந்து, குருநாதரின் பாதகமலங்களில் அவருக்கு நன்றி செலுத்தி, ஒரு கடிதம் எழுதி அன்பளிப்பாக ஒரு தொகையையும் தந்து சென்றார்.

அவரும் அவர் அன்னையும், சிறிது நேரம் அமர்ந்து மஹாமந்திர கீர்த்தனமும் செய்தனர். நம்மை மகிழ வைக்கும் பகவானை திருப்திபடுத்த, அதுதானே சுலப வழி என்று அவரே காட்டி இருக்கிறார்! அந்த இளைஞரிடம், அங்கிருந்த நாமத்வார் அன்பர் விவரம் கேட்டபொழுதுதான் மிக இனிமையான மேற் கண்ட தகவல்களை அவ்விளைஞர் பகிர்ந்து கொண்டார். அதுவரை மேற்கண்ட விவரங்கள் நாமத்வார் அன்பர்களுக்கே தெரியாது!!

சாதாரணமாக பிரார்த்தனை செய்து வந்த அன்பருக்கு, அவருக்கு வேண்டியதை தானே தேடி சென்று வழங்கி, அவரது மனக்கஷ்டத்தை விலக்கி, அவரை மகிழ்ச்சியுடன் தனது சன்னதிக்கு வருமாறு செய்து, அவருக்கு நாமகீர்த்தனம் என்ற ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கான ஒரு வழியையும், குருவின் மேல் அபார நம்பிக்கையையும் அல்லவா குருகிருபை தந்து இருக்கிறது! நாமத்வார் அமையுமிடத்திலும், நாமகீர்த்தனம் நடைபெறும் இடத்திலும், குருநாதரின் சான்னித்யமும் பகவானின் சான்னித்யமும் விளங்குவதை இச்சம்பவம் தெளிவுபடுத்துகிறது அல்லவா?



Please Renew Subscription to Madhuramurali

குருநாதரும் என்னிடம் அடிக்கடி "ப்ரேமிகவரதன் ஒரு ரகசியம் என் காதில் சொல்லி இருக்கிறான். நாமத்வாருக்கு உள்ளே வரும் ஒவ்வொரு ஜீவனிடமும் அவன் அருளை நிரப்பி அனுப்புகிறான். அது ஒருவரது உலகியல் தேவையையும் ஆன்மீக தேவையையும் நிறைவேற்றி விடும்" என்று சொல்வார்கள். இச்சம்பவம் அதை நிரூபிக்கிறது அல்லவா!

இதே சமயத்தில் நம் குருநாதர் ஆஸ்ரமத்திலும், ப்ரேமிக பவனத்திலும், தமிழக நாமத்வார்களிலும், பல ஊர்களிலும், பெங்களூர் ஆஞ்சநேய ஸ்வாமி சன்னதியிலும் பல விழாக்களில் பங்கு கொண்டருளினார் என்பது நமக்கு நன்கு தெரிந்த விஷயம். அப்பொழுதுதான் என்னிடம் திரு.பாலசுப்ரமணியன் இவ்விஷயத்தை தெரிவித்தார். நான் இதை குருநாதரிடம் தெரிவிக்க அவரும் அதை கேட்டு விட்டு, ஒரு புன்முறுவலை மட்டுமே பதிலாக தந்தார்கள். "ஆம்! எனக்கு அது தெரியும்" என்று அவர் பதில் தந்தது போல் எனக்கு தோன்றியது!

ஒரு மனிதன் கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டியது குருவின் அருள்தான். அதை நம்பி வாழ்பவனுக்கு, பெரிய கஷ்டமும் சிறியதாகி போய் விடும். அந்த அன்பு மழையில் நனைந்தால், துக்க மயமான உலக அனுபவம் கூட இனிமையாக மாறிவிடும். மஹான்கள் தேச, கால, மொழி, இனங்களை கடந்தவர்கள் என்பது நாம் கேள்விப்பட்டும் படித்தும் வந்ததுதான். அது எத்தனை முறை கேட்டாலும் அலுக்காத ஒன்றுதானே!

இச்சம்பவம் முக்கியமாக மற்றொன்றையும் தெரிவிக்கிறது. மஹான்களை கனவில் தரிசித்தாலும், அது நேரில் தரிசனம் பெறுவது போன்ற அனுபவம்தான் என்பதே அது. ஏனெனில், அந்த இளைஞர் இன்று வரை குருநாதரை நேரில் வந்து பார்த்ததே இல்லை. ஆனால் குருநாதரின் அனுக்ரஹத்திற்கு அது தடையாக இல்லை! ஏனெனில் குருநாதர் கனவில் சென்று, தன் தரிசனம் தந்து விட்டாரே!



Please Renew Subscription to Madhuramurali



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: சிலர், சிவன்தான் முக்தியை கொடுப்பார், அதனால் அவரைத்தான் உபாசிக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். மற்றும் சிலரோ, விஷ்ணுதான் முக்தியை தருவார். அதனால் விஷ்ணுவைத்தான் உபாசிக்க வேண்டும் என்கின்றார்கள். குழப்பமாக உள்ளது. நான் யாரை உபாசிக்க வேண்டும்?

பதில்: சிவன் முக்தியை தருவாரா, விஷ்ணு முக்தியை தருவாரா என்றுதானே உங்களுக்கு குழப்பம். ஆனால் அப்படி சொன்னவர்களிடமே கேட்டு பாருங்கள், குரு முக்தியை கொடுப்பாரா, மாட்டாரா என்று? அவர்களால் கூட இதை மறுக்க முடியாது. ஆகவே நமக்கு சிவன் முக்தியை கொடுப்பாரா? விஷ்ணு முக்தியை கொடுப்பாரா? என்ற கவலை வேண்டாம். நிச்சயமாக குரு முக்தியை கொடுப்பார். அது போதும் நமக்கு.

கேள்வி: மரணத்திற்கு பின் வாழ்க்கை உள்ளதா? மறுபிறவி உள்ளதா? எனக்கு புரியும்படி விளக்க முடியுமா?

பதில்: மரணத்திற்கு பின் வாழ்க்கை உள்ளதா? மறுபிறவி உள்ளதா? என்பதை பற்றி சிந்திப்பதை விட, நாம் இதற்கு முன்பாக பிறந்திருப்போமா? நம்மிடம் காணப்படக்கூடிய குணாதிசயங்களும், நம் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களும் தன்முயற்சியா? தற்செயலா? அல்லது வேறு ஏதாவது ஒரு காரணம் உண்டா? உலகத்தில் நடக்க கூடிய எல்லா விஷயங்களுக்கும் இது பொருந்துமா? உலகத்தில், பலர் பலவிதமான சுகங்களையும், மற்றும் பலர் பலவிதமான துக்கங்களையும், அனுபவிப்பதற்கு என்ன காரணம்? நடக்கக்கூடிய செயல்களில், நமக்கு ஏதாவது கண்ட்ரோல் **(CONTROL)** உள்ளதா? இந்த விதமாக உங்களுடைய சிந்தனைகளை வளர்த்து, குதர்க்கம் இல்லாமல் சிந்தனை செய்யவும்.




Please Renew Subscription to Madhuramurali

கேள்வி: நான் திருமலை யாத்திரை செல்கின்றேன் உண்டியலில் ஏதாவது, பகவானுக்கு அர்ப்பணிக்க விரும்புகின்றேன், நான் உண்டியலில் என்ன போடலாம் என்று தாங்கள் கூற முடியுமா?

பதில்: உண்டியலில், உங்கள் மனதை போட்டு விட்டு வந்து விடுங்கள். இதை காட்டிலும். பகவானுக்கு அர்ப்பணிக்க வேண்டியது வேறு என்ன உள்ளது?

ஒன்று என்று இரு; தெய்வம் உண்டு என்று இரு, உயர் செல்வம் எல்லாம்
அன்று என்று இரு, பசித்தோர் முகம் பார் நல்லறமும் நட்பும்
நன்று என்று இரு, நடு நீங்காமலே நமக்கு இட்டபடி
என்று இரு, மனமே! உனக்கே ஒரு உபதேசம் இதே!

– பட்டினத்தார்.






Please Renew Subscription to Madhuramurali



# பாகவத பழம்

**ஸ்கந்தம் 1, அத்யாயம் 19**

–ஸ்ரீஸ்வாமிஜி (38)



"அவன் செய்யத்தக்கதை செய்தவனாவான்'' என்று பரீக்ஷித்தை கொண்டாடிய ரிஷிகள் அனைவரும், அவனை மனமுவந்து ஆசீர்வதித்தார்கள்.

அவர்கள் மேலும் என்ன சொன்னார்கள் என்றால், வாஸுதேவனைப் பற்றி, வேதத்தின் மூலமாகவும், சாஸ்திரங்கள் மூலமாகவும், சாதுக்கள் மூலமாகவும் கேட்டிருந்த உன்னைப் போன்ற எவ்வளவோ ராஜாக்கள், ராஜசுகங்களை எல்லாம் தியாகம் செய்துவிட்டு அவனை அடைய காட்டிற்குச் சென்றார்கள் என்று கேள்விப்பட்டிருப்பாய். அப்படியிருக்க, அந்த வாஸுதேவனே ப்ரத்யக்ஷமாக கிருஷ்ணனாக அவதாரம் செய்து, உங்கள் குடும்பத்திற்காக தேர் ஓட்டினான். உன்னை கர்ப்பத்திலேயே காப்பாற்றினான். அப்பேர்ப்பட்ட வம்சத்தில் வந்த நீ, அவனை அடைவதற்காகக் காட்டிற்கு வந்து, தவம் இயற்றுவதில் என்ன ஆச்சர்யம் இருக்கின்றது?'' என்றார்கள். மேலும், இந்த ஏழுநாட்களும் பரீக்ஷித்துடனேயே இருப்பது என்பதையும் முடிவு செய்துகொண்டார்கள்.

அப்பொழுது மீண்டும் ஒருமுறை அவர்களை பரீக்ஷித் நமஸ்கரித்து, "ஆகாயத்தில் சப்தமாத்திரமாக இருக்கும் வேதம் உங்கள் ரூபங்களாக உலகில் நடமாடுகின்றது. மற்றவர்களுக்கு காரணமில்லாமல் அருள் செய்வதைத் தவிர அடைய வேண்டிய பொருள் வேறு ஒன்று இந்த உலகத்திலேயோ, மறு உலகத்திலேயோ, உங்களுக்குக் கிடையாது. இந்த ஏழு நாட்களில் நான் என்ன செய்ய வேண்டும் என்பதை, தயவுசெய்து சொல்லுங்கள்'' என்று ப்ரார்த்தித்தான்.

அப்பொழுது தற்செயலாக ஆத்மாராமரும், திகம்பரருமான வியாசபுத்திரர் சுகர் அங்கு வந்து சேர்ந்தார். அவரை எல்லா



Please Renew Subscription to Madhuramurali

ரிஷிகளும் விழுந்து வணங்கினார்கள். பரீக்ஷித்தும், அவரை தலையால் விழுந்து நமஸ்கரித்தான். அவர் ஒரு ஆசனத்தில் அமர்ந்தார். மற்ற ரிஷிகளின் நடுவே, அவரைப் பார்ப்பதற்கு நவக்கிரஹங்கள், நக்ஷத்திரங்களுக்கு நடுவே இருக்கக்கூடிய பூரண சந்திரன் போன்று இருந்தது. சுகரின் பெருமையையும் அவர் பரீக்ஷித்திற்கு கதை சொல்ல வந்த காரணத்தையும் எடுத்துரைப்பது போல் ஒரு செவி வழி சம்பவம் கூறப்படுகின்றது.

யுதிஷ்டிரர் ராஜஸூய யாகம் செய்தபொழுது, அவர் மனதில், இந்த யாகத்தில், ஒவ்வொரு நாளும் ஒரு லக்ஷம் பிராம்மணர்களுக்கு போஜனம் செய்து வைக்க வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று.

எண்ணிக்கைக்காக கிருஷ்ணன், ஒரு லக்ஷம் பிராம்மணர்கள் சாப்பிட்டால் ஒருமுறை அடிக்கும் படியாக ஒரு மணியை கட்டி வைத்தான். ஒருநாள் அப்படி பிராம்மணர்கள் சாப்பிடும்பொழுது, அந்த மணி நிற்காமல் அடித்துக்கொண்டு இருந்தது. உடனே தர்மபுத்திரர் கிருஷ்ணனிடம் ஓடிச்சென்று, "கிருஷ்ணா! அந்த மணி ஒரு லக்ஷம் பிராம்மணர்கள் சாப்பிட்டால் தானே ஒருமுறை அடிக்கவேண்டும்? இப்பொழுது ஏன் அடித்துக் கொண்டே இருக்கிறது? மணி கெட்டுப் போயிருக்குமோ?'' என்று வினவினார்.

கிருஷ்ணனோ, "தர்மபுத்திரரே! அப்படி எல்லாம் நான் கட்டிய மணி தவறாக அடிக்காது! வாருங்கள், போஜன இடத்திற்குச் சென்று, என்ன விஷயம் என்று பார்ப்போம்'' என்றான். யுதிஷ்டிரரும், கிருஷ்ணனும் போஜன சாலைக்குச் சென்று பந்தியில் யார் யார் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தார்கள்.

அன்று ராஜஸூய யாகத்திற்கு சுகர் வந்திருந்தார். அவர் சாப்பிடும்பொழுது, ஒவ்வொரு கவளத்திற்கும் மணி அடித்ததைப் பார்த்த யுதிஷ்டிரர், பகவானைப் பார்க்க, பகவான், "ஒரு ஜீவன் முக்தனான ஞானிக்கு கொடுக்கப்படும் ஒரு அன்ன கவளம் ஒரு லக்ஷம் பிராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்த பலனைக் கொடுக்கும். சுகர் அப்பேர்ப்பட்ட ஞானி



Please Renew Subscription to Madhuramurali

ஆனதால், அவர் உண்ணும் ஒவ்வொரு கவளத்திற்கும், மணி அடிக்கின்றது'' என்றான்.

அன்று தர்மபுத்திரரின் ராஜஸூயத்தில் அன்னம் சாப்பிட்டதால், சுகர் பாண்டவர்களுக்கு, தாம் கடன் பட்டவராக எண்ணி, அந்தக் குடும்பத்தில் வந்த பரீக்ஷித்திற்கு கதை சொல்லி, கரையேற்ற விரும்பினார் போலும்.

பரீக்ஷித்து சுகரிடம், "உங்கள் வருகையால் நாங்கள் பாக்கியம் அடைந்தோம். உங்களைப் போன்ற மஹான்களை, அவர்கள் ஆயிரம் வருடத்திற்கு முன்பாக வாழ்ந்தவர்களாக இருந்தாலும் கூட, அவர்களை நினைப்பதாலும், அவர்களைப் பற்றிக் கேட்பதாலும், அவனைச் சேர்ந்தவர்களும் அவர்களை தியானம் செய்வதாலும், செய்பவனும், செய்கின்ற இடமும் சுத்தமாகி விடுகின்றது.

**மஹான்களைப் பார்த்த மாத்திரத்தில் ஒருவனுடைய பாவங்கள், விஷ்ணுவைக் கண்ட அசுரன் போல் நாசம் அடைகின்றன.**

அப்படியிருக்க, ஜீவன்முக்தரும், வியாஸ புத்திரருமான உங்களை நான் பார்க்கின்றேனே! தொழுகின்றேனே! உங்களுடைய பாதங்களை வணங்குகின்றேனே! என்ன பாக்கியம் எனக்கு! உங்களைப் போன்ற மஹான்களைப் பார்த்த மாத்திரத்தில் ஒருவனுடைய பாவங்கள், விஷ்ணுவைக் கண்ட அசுரன் போல் நாசமடைகின்றன. என் விஷயத்தில் பகவான் விஷ்ணு சந்தோஷப்பட்டிருக்கின்றானா? என்பதைத் தாங்கள் தெரிவிக்க வேண்டும். அவன் நிச்சயமாக மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். இல்லையென்றால், மரிக்கக்கூடிய தருவாயில் இருக்கும் எனக்கு உங்களுடைய தரிசனம் கிடைத்திருக்குமா?

மேலும், மனிதர்களுக்கு மனிதப்பிறவி எந்த



Please Renew Subscription to Madhuramurali

நோக்கத்திற்காக இறைவனால் கொடுக்கப்பட்டதோ, அதை அடைவதற்கு ஒருவன் எவைகளைக் கேட்க வேண்டும்? எந்த மந்திரங்களை ஜபம் செய்ய வேண்டும்? யாரைச் சிந்திக்க வேண்டும்? அவன் என்ன காரியங்கள் செய்ய வேண்டும்? யாரை பஜனம் செய்ய வேண்டும்? என்பதோடு மட்டுமல்லாமல், யார் எவற்றையெல்லாம் சிந்திக்கக்கூடாது, கேட்கக்கூடாது, செய்யக் கூடாது? என்பவற்றை எல்லாம் எங்களுக்குக் கூறி அருளுங்கள். ஒரு பசுமாட்டின் மடிக்காம்பிலிருந்து பாத்திரத்தில் பால் விழும் நேரம் கூட ஒரு இடத்தில் தங்காத நீர், என் பொருட்டு இங்கு வந்து அமர்ந்து இருக்கின்றீர்கள் என்றால், தங்களுடைய கருணையையும், தங்களை அனுப்பி வைத்த வாஸுதேவனுடைய கருணையையும் எண்ணி, உருகுகின்றேன்'' என்று கூறியவனாய் கண்ணீர் வடித்தான். அவனால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வியாசபுத்திரரும், சர்வக்ஞருமான சுகப்பிரும்மம் பதிலளிக்க ஆரம்பித்தார்.

இத்துடன் ஸ்ரீமத் பாகவதத்தில் 19 அத்யாயங்கள் கொண்ட முதல் ஸ்கந்தம் முடிவு பெற்றது.

(கனியும்)

ஸ்ரீமத் பாகவதத்தில் பிரஹலாதனுடைய பக்தி போல், ஸ்ரீமத் ராமாயணத்தில் ஹனுமாருடைய பக்தி ஆகும். பிரஹலாதன் எல்லோருக்கும் பக்தி வர வேண்டும் என்று, இன்றும், பகவானை பிரார்த்தித்து கொண்டு இருக்கின்றார். ஹனுமாரோ, ஒரு நொடி பொழுது கூட ஓயாமல், ராம சேவையில் ஈடுபட்டார். பகவான், யார் யார் ஹிருதயத்தில், எந்த விதமான கட்டளைகளை இடுகின்றாரோ, அதையே அந்த மஹான்கள் செய்வார்கள். இதில் உயர்வு தாழ்வு இல்லை.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி



Please Renew Subscription to Madhuramurali

# *கடவுள் நம் முன் ஏன் தோன்றுவதில்லை?*

## (ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளிலிருந்து)

நாம் எல்லோருமே கடவுளின் குழந்தைகள்தானே? குழந்தைகளான நாம் நம் தந்தையான இறைவனை நோக்கி, "கருணைக்கடலே! இறைவா! உன்னை நான் பார்க்க வேண்டும்" என்று கூப்பிட்டு அழைக்கையிலே, அவர் ஏன் தன் தரிசனத்தை தரக்கூடாது? அப்படி கடவுள் நம் முன் தோன்றினார் என்றால், சர்வ நிச்சயமாக நமது தேவைகளுக்கு ஒரு முடிவு வந்து விடும். அவரால் தர முடியாதது என்று என்ன இருக்கிறது? ஆனால் அவர் அப்படி தோன்றுவதில்லை. அவர் நம் முன் தோன்றவில்லை என்பதால், அவருக்கு கருணை இல்லை என்று சொல்ல முடியுமா? கடவுளின் மீது நமக்கு இருக்கும் விசுவாசம், பக்தி மிகவும் குறைவாக இருக்கிறது; அதனால் அவர் தோன்றவில்லை என்று சொல்லலாம். அல்லது ஒரு சாரர் அவருக்கு நம் முன் தோன்ற சக்தி இல்லை என்றோ, நம் முன் தோன்ற அவன் பிகு பண்ணி கொள்கிறான் என்றோ சொல்லலாம். ஆனால் இவை எல்லாம் உண்மை ஆகாது.

நாம் அனைவரும் அவனது குழந்தைகள் என்பதால், "பக்தி, ஞான, வைராக்கியம் இல்லாததால்தான், அவன் வரவில்லை" என்பது எடுபடவில்லை. தந்தையானவர், தன் மகனுக்கோ, மகளுக்கோ கண்ணை மூடி கொண்டு எதையும் செய்வார் அல்லவா? தன் குழந்தையின் குறைகளையே கவனத்தில் கொள்வாரா? மாட்டவே மாட்டார். குறைகளே அவர் கண்களில் படாது. அது போலத்தான் இறைவனும் நாம் கூப்பிட்டவுடன், நம் முன் தோன்றி, நம் மேல் கருணை மழையை பொழிய முடியும். அவரிடம் இல்லாத சக்தியா, கருணையா, அன்பா? அவரிடம் இருந்துதானே நமக்கு எல்லாம் கிடைக்கிறது? இது சரிதான். ஆனால், கருணையின் சொரூபமான கடவுள் நம் முன் ஏன் தோன்றுவதில்லை?

ஸ்ரீமத் பாகவதமோ, மிக அழகாக ஒரு விஷயத்தை எடுத்து காட்டுகிறது. பிரஹலாதனை போன்ற சிறந்த பக்தன்



Please Renew Subscription to Madhuramurali

இல்லை. நாரதர்தான் பிரஹலாதரின் குரு என்றாலும் பிரஹலாதனைத்தான் நாம் பக்த சாம்ராஜ்ய சக்கரவர்த்தி என்கிறோம். ஆனால் பிரஹலாதனுக்கு அவன் தந்தை கொடுத்த துன்பங்கள் என்னென்ன? நெருப்பில் இடுவது, மலையில் இருந்து உருட்டி விடுவது, யானையை கொண்டு மிதிக்க செய்வது, விஷம் தருவது, சிங்கத்தின் வாயில் தள்ளுவது என்று நினைக்கவே பயம் தரும் கொடூர தண்டனைகளை பிஞ்சு குழந்தையான பிரஹலாதன் அனுபவிக்க நேரிடுகிறது.

இதை பார்க்கையில், "ஓஹோ! இறைவனை பார்க்க வேண்டுமெனில், அவர் அருளை பெற வேண்டுமெனில், இப்படி எல்லாம் கஷ்டப்பட வேண்டுமோ" என்ற கேள்வி எழுகிறது. மேலும், தனது பக்தனை, இப்படி எல்லாம் கருணாமூர்த்தியான நாராயணன் கஷ்டப்படுத்த வேண்டுமா என்றும் கேள்வி எழுகிறது.

எக்காலத்திய பக்தராக இருந்தாலும், புராண காலமோ, சரித்திர காலமோ அல்லது சமீப காலத்தவரோ, எவரெனினும் அவர்கள் ஒரு மார்க்கத்தை பின்பற்றி ஆன்ம சாதனைகள் புரிந்து கடின உழைப்பிற்கும் துயரங்களுக்கும் இடையில்தான் இறைவனின் தரிசனத்தை பெற்று இருக்கின்றனர். இதை அந்தந்த பக்தரின் சரித்திரங்களில் மிக தெளிவாக பார்க்க முடிகிறது.

ஆன்ம சாதனை என்றால் என்ன? மிக உயர்ந்த பெரியவர்கள் எந்த வழியில் சென்று இறைவனின் அருள் பெற்று முக்தி அடைந்தார்களோ, அவ்வழியில் செல்வதே சாதனை ஆகும். நமக்கு தோன்றிய வழியில் முயற்சிப்பது சாதனையும் ஆகாது. அப்படி முயற்சிப்பதற்கு பலனோ, முயற்சியினால் வரும் சிரமம்தான், பலனாக இருக்கும். அதாவது பெரியவர்கள் காட்டாத வழியில் செல்வது வீணான பிரயத்தனம்.

நல்ல காற்றோட்டமோ, குளிர்சாதன வசதியோ இல்லாத இடத்தில் நம்மால் வெகு நேரம் இருக்க முடியுமோ? முடியாது. கொஞ்சம் கொசு கடிக்கும் இடமெனில், நம்மால் சும்மா உட்காரவும் முடியுமோ? முடியாது. உட்கார்ந்திருக்குமிடம் சௌகரியமாக இருக்குமென்றால்தான், நம்மால் கண்களை மூடி



Please Renew Subscription to Madhuramurali

ஏதாவது தியானம் செய்ய முயற்சி செய்ய முடியும். ஆனால் பாகவதம் காட்டும் த்ருவனுக்கோ ஐந்தே வயதுதான். அவனோ அச்சம் தரும் மதுவனத்தில், ஆறு மாதங்கள் உணவே உண்ணாமல், நீரே பருகாமல் தவம் புரிகிறான். கடும் தவம். அதன் பின்னர்தான் நாராயணர் அவனுக்கு காட்சி தருகிறார். ஏன் துருவனுக்கு குருவான நாரதரின் முற்பிறவியிலேயே கூட, பகவான் அவரிடம் "நாரதரே நான் அபக்குவிகளுக்கு தரிசனம் தருவதில்லை. நீர் என்னை அடுத்த பிறவியில் வந்தடைவீர்" என்று சொல்லி விடுவதையும் பாகவதம் சொல்கிறது. முசுகுந்த சக்கரவர்த்தி என்றொரு ராஜா. அவரை கொண்டுதான் கிருஷ்ணர் காலயவனன் என்னும் கொடியவனை அழிக்கிறார். தானே வலிய வந்து, முசுகுந்தனுக்கு தரிசனமும் தருகிறார். அதன் பின் முசுகுந்தன் "எனக்கு முக்தி உண்டா" என்று கேட்கிறார். கிருஷ்ணரோ "மற்றொரு பிறவி எடுப்பது அவசியம்" என்று சொல்லி விடுகிறார்.

ஆக பக்தர்கள் சிரமப்பட்டுத்தான் இறைவனின் பேரருளை பெற்றிருக்கின்றனர். ஏன்? சிரமம்தான் வழியா? ஒரு மாணவனுக்கு படிப்பே வரவில்லை. அவன் டாக்டராக ஆசைப்படுகிறான் என்று வைத்து கொள்வோம். அது மட்டுமில்லை ஒரு கை தேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணராக ஆசைப்படுகிறான். அவனுக்கு கடவுளின் அபரிமித கருணையால், அப்படி ஒரு சர்ட்டிபிகேட் கிடைத்து விடுகிறது என்று வைத்து கொள்வோம். அவனுக்கு சர்ட்டிபிகேட் கிடைத்து விட்டாலும், அவனுக்கு அந்த தகுதி இல்லை என்று அவனுக்கே தெரியும். அதனால், அவனுக்கு மிகுந்த சந்தோஷம் இராது. ஏனெனில், சான்றிதழை வைத்து கொண்டு சதையை அறுக்க முடியுமா என்ன? அவன்தான் முதல் தகுதியான டாக்டர் படிப்போ அல்லது அதற்கு முன்பே தேவையான உயர்நிலை படிப்புகளிலோ தேர்வாகவில்லையே? அவனிடம் இருக்கும் சர்டிபிகேட்டை வைத்து கொண்டு, அவன் இப்பொழுது என்ன வியாதி என்று கூட கண்டுபிடிக்க முடியாதே! அது போலவே கடவுளே நேரில் வந்து தரிசனம் தந்தாலும், அவரை பற்றி ஒன்றும் தெரியாமல் இருந்தால், அவரை எப்படி புரிந்து கொள்ள முடியும்? அல்லது அவரை எப்படி அனுபவிக்க முடியும்?


Please Renew Subscription to Madhuramurali

பக்குவம் அடைந்த சாதகருக்குத்தான் தன் தரிசனத்தை கடவுள் தருகிறார். இப்படி செய்வதால், தன்னை நம்பியவர்களை அவர் சோதிக்கிறார் என்று அர்த்தமில்லை. பக்தர்களை மென்மேலும் மேலான பக்குவ நிலைக்கு இட்டு சென்று, முழு பக்குவம் அடைந்த பின், தனது தரிசனத்தை தருகிறார் என்றுதான் சொல்ல வேண்டும். பக்குவமடைந்த நிலையில், சாதகன், பகவானின் தரிசனத்தினால் கிடைக்கும் அனுபவத்தை நன்கு உணர்ந்து அனுபவிக்கவும் செய்கிறான். அப்படி பக்குவம் இல்லாமல் இருக்கும் ஒருவனுக்கு கடவுள் தரிசனம் கிடைக்கும் எனில், அது வெற்று சான்றிதழை வைத்து கொண்டு மருத்துவம் பார்க்க முடியாமல் திண்டாடுபவனை போன்றதுதான். அதாவது தரிசனத்தின் முழு பயனை அவன் அடைய மாட்டான்.

கடவுள் சொல்வதெல்லாம், "குழந்தாய் உன்னை பரிபக்குவப்படுத்தும் முயற்சியில் நான் ஈடுபட்டு உள்ளேன். பொறுமையாய் இரு. என் தரிசனம் உனக்கு நிச்சயம் உண்டு" என்பதுதான்.






Please Renew Subscription to Madhuramurali

# அனுபவம் 4
## –அஹம்ஸ்புரணம்

–ஸ்ரீபத்மபாதர்

ஒவ்வொருவருக்குள்ளும் 'நான்', 'நான்' என்ற அஹம்ஸ்புரணம் என்பது ஸதா நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றது. இந்த 'நான்' என்பது சாதாரணமாக சொல்லப்படும் 'அஹம்பாவம்' இல்லை. வழக்கில் 'அகம்பாவம்' என்று சொல்வது கர்வத்தைத்தான். இதுவோ 'அஹம்' ஸ்புரணம். இதை நன்றாகப் புரிந்துகொள்வது அவசியம். கண்கள் ஸதா பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், பார்க்கும் பலவற்றில் ஏதோ ஒன்றில்தான் நம் கவனம் செல்கிறது. வீட்டில் ஒரு நாற் காலியில் அமர்ந்திருக்கின்றோம் என்றால், நாற்காலியும், வீடும் நன்கு கண்களுக்குத் தெரியும். அதில் நாம் கவனம் செலுத்துவதில்லை. ஆனால், அப்பொழுது யாராவது புதிதாக வந்தால், அவரிடம் கவனம் செல்லும். வந்தவர் நமக்கு பிடித்தவர் என்றால் கொஞ்சம் அவரைக் கவனிப்போம். பிடிக்காத ஒருவர் வந்துவிட்டாலோ, அவர் வெளியில் போகும்வரை அவரிடமே கவனம் இருக்கும். அவர் போனபின்தான், பிற விஷயங்களில் கவனம் செல்லும்.

காதுகளில் ஏதோ ஒரு சப்தம் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. மின் விசிறி சுழலுவது, தண்ணீர் குழாயிலிருந்து விழுவது, டி.வி சப்தம், பேருந்து ஓடுவது என்று பல விழுந்து கொண்டே இருக்கின்றது. ஆனால், ஒரு அற்புதமான இசை காதில் விழுந்தால் அதில் கொஞ்சம் கவனம் செல்லும். ஒரு பயங்கரமான சப்தம் காதில் விழுந்தாலோ, அதிலே நமது முழு கவனமும் செல்லும். இது தானாகவே நிகழ்ந்துவிடும். இப்படித்தான் வாய் எதையாவது மென்றாலும், இனிப்பான ஜிலேபி என்ற உணவை உண்டால், அது தித்திக்கையில், அதில் கவனம் மிகும். ஆனால் பாருங்கள், பாகற்காயையோ அல்லது வேம்பு கஷாயமோ உண்டால் அதை துப்பிவிடத் தோன்றும். வாந்தி வந்தால் பரவாயில்லை எனத் தோன்றும். கசப்பு ஒரு



Please Renew Subscription to Madhuramurali

கவனத்தைக் கொண்டுவரும். நுகருவதிலும் இப்படித்தான். எதையாவது மூக்கு நுகர்ந்துகொண்டுதான் இருக்கின்றது. ஆனால் சந்தன வாசனை வந்தால், "ஆஹா சந்தனம் மணக்கின்றது" என்கின்றது மனது. இதைவிட சாக்கடை அருகில் நின்றால் முழு கவனமும் அதிலே செல்கின்றது. தோலில் இருக்கும் ஸ்பரிசத்தை பாருங்கள். எழுதுபவர் பேனாவைத் தொட்டு, பேப்பரை தொட்டுதான் எழுதுகின்றார். அந்தத் தொடுதல் அவருக்குத் தெரியும். இருந்தாலும் ஒரு ஐஸ்கட்டியை கைகளில் வைத்தால், தொடுதல் என்பது என்னவென்று நன்கு விளங்கும். கைகளில் அடிபட்டு வலிக்கையில், வலி அதை இன்னும் நன்கு விளக்குகின்றது அல்லவா? வலிக்கையில் ஸ்பரிசம் என்பதன் உணர்வு புரிவதைப் போன்று, மற்றொன்றில் இராது. இப்படி கண், காது, வாய், மூக்கு, தோல் போன்ற அனைத்து இந்திரியங்களும் ஸதா வேலை செய்தாலும், அதன் அனுபவத்தில் நம் கவனம் எப்பொழுதும் செல்வதில்லை எப்பொழுது நன்றாக செல்கின்றது என்றால், சுகானுபவத்தைவிட, துக்கத்தில்தான் அதிகம் செல்கின்றது.

அப்படித்தான் நம்மில் நான், நான் என்ற அஹம்ஸ்புரணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது தமிழோ, தெலுங்கோ, மலையாளமோ, ஸமஸ்க்ருதமோ, ஆங்கிலமோ அல்ல. இது ஒரு உணர்வு. இது எப்பொழுதும் நிகழ்வதால், அதை நாம் அலட்சியப்படுத்துகின்றோம். ஒரு அவமானமோ, துக்கமோ வரும்பொழுது ‘‘அடடா! எனக்கு இப்படி ஆகிவிட்டதே’’ என்கின்றோமே, அதுதான் இது. விரும்பியது கிடைத்தாலும், மகிழ்ச்சியிலும் இது இருக்கும். ஆனால், சுகத்தில் இது அவ்வளவு புரியாது.

இந்த ‘அஹம்’ ஸ்புரணம் என்பது ரமண மஹரிஷிகளுக்கு அதி தீவிர பயத்தில் விளங்கியது. கௌதம புத்தருக்கு தாங்க முடியாத துக்கத்தில் விளங்கியது. எப்படியென்றால், அந்த பயத்திலிருந்தும், துக்கத்திலிருந்தும் விலகியே ஆக வேண்டிய கட்டத்தில், இந்த ‘அஹம்’ ஸ்புரணம் புரிந்து, தான் யார் என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர். அறிவிற்கு அப்பாற்பட்ட இந்த இயல்பான உணர்வு ஸதா இருந்தாலும், நம்மால் உணரப்படுவதில்லை என்பது ஒரு அதிசய உண்மை.


Please Renew Subscription to Madhuramurali

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



Please Renew Subscription to Madhuramurali

## *மதுரமுரளி வாசகர்களுக்கு ஒரு முக்கிய வேண்டுகோள்*

நமது மதுரமுரளி ஆன்மீக மாத இதழ் கடந்த 18 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவர உறுதுணையாக இருக்கும் வாசகர்களான உங்களுக்கு முதற்கண் எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒவ்வொரு மாதமும் பல மதுரமுரளி பத்திரிக்கைகள் முகவரி சரியில்லாததால் தபால் நிலையத்தாரால் எங்களுக்கு திருப்பி அனுப்பப்படுகின்றன. அவற்றில் தொலைபேசி உள்ள வாசகர்களை மட்டும் தொடர்புகொண்டு, இதழ் அவர்களின் இல்லங்களை சென்று அடைய எங்களால் இயன்ற அளவு முயற்சி செய்து வருகின்றோம். ஆகவே வாசகர்களாகிய தாங்கள் மதுரமுரளி சரியான நேரத்தில் கிடைக்கவில்லை / வரவில்லை என்றாலோ, தாங்கள் சந்தா எண், முகவரி, பின்கோடு, தொலைபேசி எண், போன்ற விவரங்களை (பின்கோடு, தொலைபேசி எண் மிகவும் அவசியம்) எங்களுக்கு அனுப்ப வேண்டுகின்றோம். மேலும் அனைத்து சந்தாதாரர்களையும் தங்களது தொலைபேசி எண்ணை எங்களுக்கு தெரிவிக்க வேண்டுகின்றோம். தாங்கள் செய்யும் இந்த உதவி, இதழ் சரியான நேரத்தில் தங்களுக்கு கிடைக்கச் செய்ய எங்களுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்.

***ஆயுள் சந்தாதாரர்கள் கவனத்திற்கு*** – மதுரமுரளி இதழ் அச்சிடுவதற்கான காகிதம், அச்சு செலவு போன்றவவை, கடந்த ஆண்டுகளில் பன்மடங்காக உயர்ந்து, மேலும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. எனவே தற்சமயம் ஆயுள் சந்தா புதியதாக வாங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் 2003க்கு முன்பு ஆயுள் சந்தாதாரர்களாக சேர்ந்தவர்கள் தங்களது ஆயுள் சந்தாவை வருட சந்தாவாக வருடாவருடம் மீண்டும் புதுப்பித்துக்கொண்டால் எங்களுக்கு பேருதவியாக இருக்கும். இது ஒரு வேண்டுகோள் மட்டுமே. மற்றபடி தங்களுக்கு மதுரமுரளி மாத இதழ் சரிவர கிடைக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. மேலும் விவரங்களுக்கு ***94426 13710 / 044 2489 5875*** என்ற எண்களை காலை 9 – 12க்குள் தொடர்பு கொள்ளலாம்.


*பதிப்பாளர் – மதுரமுரளி*



Please Renew Subscription to Madhuramurali

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் - 4

சென்னை ராமகிருஷ்ணா மடம் - ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை



இறைவனை அடைவதற்கான பல மார்க்கங்களை பயின்று, அதில் சித்தி பெற்ற மஹான்கள், அந்தந்த மார்க்கங்களில் மட்டும்தான், தன்னிடம் வருபவர்களுக்கு பதில் சொல்வர். யோகம் கற்பிப்பவரால் வேதாந்த மார்க்கத்தை உபதேசிக்க முடியாது. வேதாந்தம் கற்பிப்பவரால் பக்தி செய்ய சொல்லி தர முடியாது. ராமகிருஷ்ணர் இந்த விஷயத்தில் மிகவும் வேறுபடுகிறார்.

ராமகிருஷ்ணர் வாழ்ந்ததோ ஐம்பதே வருடம்தான். அவர் சரித்திரத்திலோ, "அவர் ஜடாதாரியின் மூலம் வாத்ஸல்ய பாவனையில் ராமரை பார்த்தார்; பைரவி பிராம்மணி மூலம் தாந்திரிக சாதனைகளை கைக்கொண்டு அதில் உண்மை இருப்பதை கண்டார்; சக்தி மந்திரத்தை உபதேசம் பெற்று, அதில் சித்தி பெற்றார் என்றெல்லாம் இருக்கிறது".

"ராமரை ஆஞ்சநேயராக உபாசிக்கையில், அவருக்கு ஒரு வாலே கூட முளைத்து விடுகிறது. கிருஷ்ணனை கோபி பாவத்தில் பக்தி செய்கையில், அவருக்கு ஸ்திரீகளுக்கு ஏற்படும் பஹிஷ்டையும் ஏற்படுகிறது".



Please Renew Subscription to Madhuramurali

இன்னும் சொல்ல போனால் தோத்தாபுரி என்ற ஞானி மூலமாய், வெறும் அரை மணி நேரத்தில், அத்வைத சாதனையில் ராமகிருஷ்ணர் சித்தி பெறுவதை பார்க்கிறோம்.

இப்படி நம் மதத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள்தான் என்றில்லை. கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகிய மதங்களில் சொல்லப்பட்டிருப்பதையும் அனுபவத்தில் கண்டார். எல்லா மார்க்கங்களும் சத்தியம் என்று சொல்வதற்காக வந்த ஒரு அவதாரம்.

ராமாயணம், மஹாபாரதம் பொய் என்றால், அவர் ராமனையும், கிருஷ்ணனையும் நேரில் பார்த்து, அது உண்மை என நிரூபித்தார். அர்ச்சாவதாரத்தில் ஸ்வாமி இருப்பது பொய் என்றால் காளியை உபாசித்து, அவளை சாக்ஷாத்கரித்து, அவள் மூச்சு விடுவதை கூட காட்டி, அர்ச்சாவதாரத்தில் ஸ்வாமி இருப்பது உண்மை என்பதை நிரூபித்தார்.

ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகளை எழுதிய, அவரது சீடரான "ம" என்கிற மகேந்திரநாத் குப்தா, ராமகிருஷ்ணரிடம் ஒருமுறை "நீங்கள் சொல்வது எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ள முடிகிறது. ஆனால் அர்ச்சாவதாரத்தில் பகவான் இருக்கிறான் என்று சொல்வதை மட்டும் ஒப்புக்கொள்ள முடியவில்லை" என்றார். அதற்கு ராமகிருஷ்ணர், "நீ சொல்லும் பகவான் சர்வசக்தர்; அவர் எல்லாம் அறிந்தவர்; அவருக்கு தெரியாதது என்று எதுவும் கிடையாது; அவரால் செய்ய முடியாதது என்று எதுவும் கிடையாது; அவர் எங்கும் வியாபித்திருப்பவர்; அப்படித்தானே" என்றார்.

"ஆம்" என்று பதிலுரைத்தார் "ம".

"அப்படியானால், அந்த சர்வ சக்தி வாய்ந்த தெய்வம், ஏன் ஒரு அர்ச்சாவதாரத்தில் தன்னை வெளிப்படுத்தி கொள்ள முடியாது? அர்ச்சையில் தன்னையே வழிபடுகின்றனர் என்று ஏன் அதற்கு தெரியாது?" என்று ராமகிருஷ்ணர் கேட்டவுடன் "ம" மேற்கொண்டு பேசாமல், ராமகிருஷ்ணர் சொல்வதை ஒப்பு கொண்டார்.



Please Renew Subscription to Madhuramurali

இல்லறம் என்பது வெறுக்கத்தக்கதல்ல என்பதையும் காண்பித்தார் ராமகிருஷ்ணர். நம் மதத்தில் மனைவியை தர்மபத்தினி என்பர். ரிஷிகள் வாழ்ந்தது போல் சாரதாதேவியை திருமணம் செய்து கொண்டு, அவர் அவளையும் மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு சேர்த்தார். இப்படி பெண்களாலும் இல்லறம் மூலம் ஆன்மீகத்தில் முன்னேற முடியும் என்பதையும் காண்பித்தார்.

இப்படி சகலவிதத்திலும், சகல பரிமாணங்களிலும், மிக சிறப்பாக காணப்படுகிறது ராமகிருஷ்ண அவதாரம்.

நமது இதிஹாச புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் சத்தியமானவை என்பதை, ராமகிருஷ்ணர் நிரூபித்தார். இதிஹாச புராணங்கள், சகுண வழிபாடு, பக்திபாவனைகள், வேதாந்த விசாரம், யோகம் என்று மட்டுமில்லாமல் நம் நாட்டில் தொன்றுதொட்டு இருக்கும் சிறுசிறு சம்பிரதாயங்கள் கூட ராமகிருஷ்ணரால் நிரூபணம் செய்யப்பட்டவையே. (தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)

Consultant in Endocrinology, Diabetes & Metabolism

Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New No. 228, old No. 169, R.K.Mutt Road,

Mandaveli, Chennai - 600 028

(Next to Ravi Pharmacy)

ADVT Ph - 044 - 24950090, Mob - 9840488777




Please Renew Subscription to Madhuramurali

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று -13



திரு.எஸ்.ராஜப்பன்

அண்ணாநகர் சாந்தி காலனியில் அமைந்துள்ள சிறு திருப்பதி திருக்கோவில், ஆச்சர்யமான வகையில் அமைந்ததை அதன் ஸ்தாபகரிடம் விரிவாக கேட்டு தெரிந்து கொள்ளலாம். இதற்கு பின்னர், கொடுங்கையூர், எம்.ஜி.ஆர் நகர், வளசரவாக்கம், கோட்டூர்புரம், நுங்கம்பாக்கம், அசோக்நகர் 10வது அவென்யூ, மாத்தூர், சிந்தாதிரிப்பேட்டை, மாம்பலம், தி.நகர், பெருங்களத்தூர், வடபழனி, குன்றத்தூர், பூவிருந்தவல்லி, கொலப்பாக்கம், அயனாவரம், மலைப்பட்டு, திருவல்லிக்கேணி, வரதமுத்தி அப்பன் தெரு, உடையார் கோவில், கேகேநகர், திருநீர்மலை, பௌண்டிரபுரம், சூளைமேடு, மைலாப்பூர், பூக்கடை, தப்பலாம்புலியூர், போலகம், மதுராந்தகம், ஏழுகிணறு, ஆழ்வார் பேட்டை, யானைக்கொள்ளி, பைராகி மடம், திருப்பூர், கீழ்திருப்பதி, திருச்சானூர், வேளச்சேரி, சிறுகேசரி, பள்ளிக்கரணை, செம்மனஞ்சேரி ஆகிய இடங்களில் பல பெருமாள் திருக்கோவில்களை பிப்ரவரி 24 வரையிலுமாக தினமுமே ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன் தரிசித்து இன்புற்றோம்.

சென்னையிலேயே பல திருக்கோவில்கள் உள்ளன என்பதையும், பெருமாள் ஒவ்வோர் இடத்திலும் எப்படி ஓயாமல் சேவார்த்திகளுக்கு தரிசனம் தந்து அருள் பாலிக்கிறார் என்பதும், இன்னும் காணப்படாத தலங்களையும் எண்ணுகையில் எங்களுக்கு மலைப்பாக இருந்தது. குருநாதரின் பரம கருணையினால்தானே இவை எல்லாம் சாத்தியமாயிற்று! பெருமாள் தரிசனத்தை அவரது ஆக்ஞையின் பேரில் செய்தோம் என்பதால், எல்லாம் மிக ஈடுபாட்டுடனும் இனிமையான சிந்தனையுடனும் செய்ய முடிந்தது என்பதில் ஐயம் சிறிதுமில்லை.



Please Renew Subscription to Madhuramurali

அருணாசலத்தில் ஏறத்தாழ 400 வருடங்களுக்கு முன் ஒரு நல்ல அந்தணர் இருந்தார். மாடு மேய்த்து கொண்டிருந்த பையன் ஒருவன் ராஜாவாக ஆவான் என்று அவர் சொன்னார். அவன் ஜாதகத்தை பார்த்து, அப்படி சொன்னார் அவர். அவர் சொன்னபடியே அவன் ராஜாவானான். அரசனாகிய அவன், அவரை தம் மந்திரியாக வைத்து கொண்டான். ஐயன் என்கிற அவர் சில நற்காரியங்களை செய்தார். அருணாசலத்தில் ஐயன் குளம் என்றும் ஐயன் கோபுரம் என்றும் உள்ளது. அந்த ஐயனுடைய புதல்வர் ஒரு நூல் எழுதினார். அதில் ஒரு இடத்தில் "மாதவரும், வேதாவும் பரமாத்மாவின் அடியையும், முடியையும் பார்க்க சிரமப்பட்டனர். ஐயன் ஒரு குளத்தை வெட்டி, ஒரு கோபுரத்தை கட்டி அவ்விரண்டையும் பார்த்து விட்டார்" என்று புத்திசாலித்தனமாக எழுதி விட்டார்.

–ஸ்ரீகாஞ்சி மஹாபெரியவாள் உபன்யாசத்திலிருந்து கேட்டது


உ

**ஸ்ரீவித்யா ஜோதிடாலயம்**

ஸ்ரீகிருஷ்ணா அடுக்ககம், 33/2, வேம்புலி அம்மன் கோயில் தெரு சந்து,
பழவந்தாங்கல், சென்னை – 600114 தொலை பேசி – 222670380
மொபைல் – 9940610522

கணினி மூலம் ஜாதகம் கணிக்க, ஜாதக பலன் அறிய, கல்வி, குடும்ப பிரச்சினை, வேலை வாய்ப்பு, திருமணப் பொருத்தம் பார்க்க மற்றும் அனைத்து ப்ரச்சினைகளுக்கும் உயர்கணிதசார ஜோதிட (Stellar Astrological System) முறைப்படி, புதிய அணுகுமுறையில் பலன்கள் கூறப்படும். எளிய முறையில் பரிகாரங்கள் சொல்லப்படும்.

C.குமரகுரு
MA. Astro, Mphil Astro
9444949349

V. **கல்யாணசுந்தரம்**
ஜோதிட ரத்னா, ஜோதிட ஆதித்யா
ஜ்யோதிஷ் பூஷண்

-Advertisement





Please Renew Subscription to Madhuramurali

## சனாதனப்புதிர் பகுதி 51 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. சிவ சஹஸ்ர நாமம் எத்தனை உள்ளது? எந்தெந்த நூல்களில் காணப்படுகிறது?
2. அனுசாஸன பர்வத்தில் வரும் சிவபுராணம் யாரால் சொல்லப்பட்டது?
3. சாந்தி பர்வத்தில் சிவ சஹஸ்ர நாமம் எங்கு காணப்படுகிறது?
4. அனுசாஸனபர்வத்தில் காணப்படும் ஸ்தோத்திரங்கள் எவை?
5. லிங்கபுராணத்தில் சிவ சஹஸ்ர நாமம் எங்கு காணப்படுகிறது? (Version 1)
6. லிங்க புராணம் (version2) – சிவ சஹஸ்ர நாமம் எங்கே காணப்படுகிறது?
7. சிவசஹஸ்ரநாமம் சிவபுராணத்தில் எங்கு காணப்படுகிறது?
8. வாயுபுராணத்தில் சிவசஹஸ்ரநாமம் எங்கு காணப்படுகிறது?
9. ப்ரஹ்மபுராணத்தில் சிவசஹஸ்ரநாமம் எங்கு காணப்படுகிறது?
10. மஹாபாகவத உபபுராணத்தில் சிவசஹஸ்ரநாமம் எங்கு காணப்படுகிறது?


rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT
website: www.rajmanibuilders.com





Please Renew Subscription to Madhuramurali

## சனாதனப்புதிர் பகுதி 51 - விடைகள் - ஆத்ரேயன்

1. எட்டு; மஹாபாரதம் — அனுசாஸன பர்வா; மஹாபாரதம் — சாந்தி பர்வா; லிங்கபுராணம்; (இரண்டு இடங்களில்) சிவபுராணம்; வாயு புராணம்; ப்ரஹ்ம புராணம்; மஹாபாகவத உப புராணம்.
2. யுதிஷ்டிரர் பீஷ்மரை கேட்க, பீஷ்மர் பகவான் கிருஷ்ணரை பார்த்து சிவ சஹஸ்ரநாமத்தை சொல்லும்படி கேட்கிறார். ஜாம்பவதி கேட்டுக்கொண்டதன்படி, உபமன்யுவை நாடி, அவர் மூலம் உபதேசம் பெறப்பட்டு சிவசஹஸ்ரநாமத்தை ஸ்ரீகிருஷ்ணன் சொல்கிறார்.
3. அத்தியாயம் X 2 8 4. தக்ஷப்ரஜாபதி சொல்வதாக அமைந்து இருக்கின்றது. இதில் மொத்தம் 6 0 6 நாமாக்கள் உள்ளன. த்ரிஸுபர்ண மந்த்ரம் (ரிக்வேதம் X.114.3.5) சதருத்ரீய மந்திரங்கள் (சுக்லயஜுர்வேத ஸம்ஹிதை) (16.1.66) — இவைகளை சேர்த்து 1008நாமாக்கள் என்று கணக்கு செய்யப்படுகிறது.
4. சிவஸ்தவம் — உபமன்யு (14-150-166); சிவசஹஸ்ர நாமம் — ஸ்ரீகிருஷ்ணர் — 17.30.150; விஷ்ணு சஹஸ்ரநாமம் — பீஷ்மர் — 135.14.120; கிருஷ்ணஸ்தவம் — பீஷ்மர் — 143.6.44. ருத்ரஸ்தவம் — கிருஷ்ணர் — 145-146. இன்னும் பல.
5. லிங்கபுராணம் (version1) 1.65.54.168. ஆங்கிரஸ கோத்திரத்தில் பிறந்த வஸுமனஸின் பிள்ளை த்ரிதன்வான் அஸ்வமேதம் செய்ய விரும்பி ஐஸ்வர்யம் இல்லாமையால், ப்ரஹ்மாவின் புதல்வனான தண்டியை சந்தித்து சிவசஹஸ்ரநாமம் பெறப்படுகிறது.
6. லிங்கபுராணம் -(version2) 1.98.27.159 விஷ்ணு சிவனிடம் இருந்து சுதர்ஸன சக்கரத்தை பெறுவதற்காக சிவனை துதி செய்வதாக அமைந்துள்ளது. ஜாலந்தரனை அழிக்க, சிவனால் உற்பத்தி செய்யப்பட்டது ஸுதர்ஸன சக்கரம்.
7. சிவபுராணம் (iv.35.2.131) விஷ்ணு மானசரோவர் ஏரியில் இருந்த 1000 தாமரை பூக்களை பறித்து, ஒரு நாமாவிற்கு ஒரு பூ வீதம் அர்ச்சனை செய்து ஸுதர்சன சக்கரத்தை பெறுகிறார். ஹரீஸ்வர கீதை என்று சிவபுராணத்தில் காணப்படுகிறது.
8. வாயு புராணம் (I.35.179.319) சாந்தி பர்வத்தில் உள்ள தக்ஷப்ரஜாபதி கதை இங்கு காணப்படுகிறது. இதிலும் த்ரிஸுபர்ண மந்திரங்களும் சதருத்ரீய மந்திரங்களும் சேர்க்கப்பட வேண்டும் (1.35.243).
9. 37.97.381.137 — ப்ரஹ்மபுராணம். வாயு புராணத்தில் இருப்பது போல் காணப்படுகிறது. வேத மந்திரங்கள் நிறைந்ததாக உள்ளது.
10. அத்தியாயம் 67 — பகீரதன் சிவனை குறித்து தவம் செய்தான். கங்கையை பூலோகம் வரவழைத்து தனது முன்னோர்களான சகரபுத்திரர்களை (கபில முனிவர் சாபத்தால் சாம்பலானவர்களை) கரையேற்றுவதற்கு — இந்த சஹஸ்ர நாமம், அப்பொழுது சொல்லப்பட்டதாக தெரிகிறது.


Please Renew Subscription to Madhuramurali

# பாலகர்களுக்கு ஒரு கதை



## காலி பாத்திரம்!

அரச மரங்களும் ஆலமரங்களும் நிறைந்து காணப்பட்ட ஒரு இயற்கை மிகுந்த சூழலில் ஒரு ஆஸ்ரமம் இருந்தது. அந்த ஆஸ்ரமத்தில் துளசி வனம் நிறைந்தும், பூச்செடிகளும் நிறைந்து இருந்தது. அது பார்க்க மிக குளிர்ச்சியாகவும், மனதிற்கு மிக இதமாகவும் அழகாகவும் இருந்தது. அந்த ஆஸ்ரமம் மிகுந்த சான்னித்யத்துடன் விளங்கியது. அந்த ஆஸ்ரமத்தில் வசித்து வந்த ஒரு மஹான்தான் அதற்கு காரணம் என்று சொல்லவும் வேண்டுமோ?

அந்த மஹானின் புகழ் எங்கும் பரவியது. அதனால் அவரை பார்க்க பலருக்கும் ஆசை பிறந்தது. அதில் நடுத்தர வயது கொண்ட ஒரு இளைஞனும் ஒருவன். அவன் எல்லா மதங்களை பற்றியுமே நிறைய படித்திருந்தான். அவற்றில் எல்லாம் அவன் முதுநிலை பட்டங்களும், டாக்டர் பட்டங்களும் கூட பெற்று இருந்தான். அதனால், தனக்குத்தான் எல்லாம் தெரியுமே என்றும் நினைத்தவாறு இருந்தான்.

ஆனாலும், இந்த மஹானைப் பற்றி கேள்விப்பட்டதிலிருந்து, அவன் மனதிலும் ஒரு ஆசை துளிர்த்து இருந்தது. மனதில் அலட்சியத்துடன் அவன் அவரை பார்க்க புறப்பட்டான். அந்த மஹாத்மா கருணையே வடிவானவர். அதனால் அவர் அவன் வரவை எதிர்பார்த்து, தனது ஆஸ்ரமத்தில் தனது குடிலில் அமர்ந்திருந்தார். அவன் வந்தபொழுது, அவனை வரவேற்று, தன் முன் உட்கார வைத்தார். அவனை பார்த்து "வாப்பா, உனக்கு நிரம்ப தாகமாக இருக்குமே" என்று சொல்லியவாறே, பாத்திரத்தில் நீரையும் ஒரு டம்ளரையும் எடுத்து அவன் முன் வைத்தார்.

"எங்கிருந்து வருகிறாய்? உன் பெயர் என்ன? எதற்காக இவ்வளவு தூரம் வந்தாய்?" என்று கேட்டவாறே, அவன் முன்



Please Renew Subscription to Madhuramurali

இருந்த டம்ளரில், பாத்திரத்தில் இருந்து நீரை ஊற்ற ஆரம்பித்தார். தண்ணீர் ஊற்றி கொண்டே அவர் பேசி கொண்டிருந்தார். டம்ளரானது நீரால் நிரம்ப ஆரம்பித்தது. மேலும் ஊற்றினால், அது நிரம்பி வழியும் தருணம் வந்து விட்டது.

அப்பொழுது அந்த இளைஞன் அவரை பார்த்து "அய்யா! போதும் போதும்! மேலும் நீர் ஊற்றாதீர்கள். ஊற்றினால் நீர் வழியும். வீணாகும்" என்றான். அப்பொழுது அந்த மஹான் அவனிடம் "தம்பி! நீ சொல்வது மிக்க சரி. நன்றாக கவனித்து இருக்கிறாய். நானும் கூட ஒன்றை கவனித்தேன். அது என்ன என்றால், உன் மனம் ஆகிய சிறு பாத்திரம் ஏற்கனவே பல விஷயங்களை குடித்து நிரம்பி இருக்கிறது. அதனால் அது புதிதாக எந்த ஒரு ஞானத்தையோ, விளக்கத்தையோ, பெற்று கொள்ளும் நிலையில், இப்பொழுது இல்லை.

நான் உனக்கு ஞானம் கொடுக்க வேண்டுமென்றாலும் கூட, நீ அதற்கு இடைவெளி கொடுக்காமல், மனதை முழுவதுமாக நிரப்பி வைத்து கொண்டு இருக்கிறாய். உண்மையில் நீ தேடும் ஞானம், உனக்கு எப்பொழுது கிட்டும் தெரியுமா? உனது மனம், ஒரு காலி டம்ளர் போல் திறந்த மனப்பான்மையுடன், கற்று கொள்ளும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மனத்துடன் ஒரு குருவையோ ஆசிரியரையோ நீ அண்டினால்தான், உனக்கு எந்த ஆசிரியராலும், எந்த ஒரு ஞானத்தையும் கொடுக்க முடியும். First go and empty your cup and then come என்று சொல்லி அப்பொழுதே அந்த மாணவனுக்கு மிகவும் தேவையான, அந்த ஞானத்தையும், அவன் ஞானம் பெற செய்ய வேண்டிய சாதனத்தையும் கொடுத்து, அவனை அனுப்பினார் அந்த மஹாத்மா.

ஆகவே நண்பர்களே! நாம் எவ்வளவு படித்து இருந்தாலும், ஒரு ஆசிரியரை அணுகுகையில், ஏற்கனவே நாம் என்னவெல்லாம் படித்து இருக்கிறோமோ, அது எல்லாம் மனதில் இருந்து, நமக்கு இடையூறாக இருக்காமல், பண்ணி கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட மனதுடன் ஆசிரியரை அணுக



Please Renew Subscription to Madhuramurali

வேண்டும். ஒரு காலியான பாத்திரம் போல் இருந்து, அவர் சொல்வதை கவனமாக கருத்தில் ஏற்றால்தான், அவர் சொல்ல வருவது நமக்கு சரியாக புரியும். அப்பொழுதுதான் நம்மால் உண்மையான கல்வியே கற்க முடியும்.

அப்படி காலியான பாத்திரம் போன்று, திறந்த மனதுடன் இருந்தால், உலகமும் நமக்கு தினமும் புதுப்புது பாடங்களை எப்பொழுதும் கற்று தந்து கொண்டே இருக்கும். அதனால் நாம் ஒரு உன்னத ஸ்தானத்தை, உலகில் அடைவது மட்டுமல்லாமல் ஒரு நல்ல மாணவனாகவும் இருப்போம். ஆகவே இன்றிலிருந்து நாமும் ஒரு empty cup உடன் எந்த காரியமும் செய்ய துவங்குவோமா?

---

## FORM IV

Statement about ownership and other particulars about newspaper **Madhuramurali**

| | |
|---|---|
| 1. Place of Publication | -2/24, Nethaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083, TamilNadu |
| 2. Peridicity of Publication | - Monthly |
| 3. Printer's Name / Nationality | - M/S Rajthilak Printers(P) Ltd, Sivakasi / Indian |
| a.Whether a Citizen of India | - Yes |
| 4. Publisher's Name / Nationality | - S. Srinivasan / Indian |
| a.Whether a Citizen of India | - Yes |
| 3. Editor's Name / Nationality | - S. Sridhar / Indian |
| a.Whether a Citizen of India | - Yes |

I, S.Srinivasan, Publisher, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date - 1/3/2013 Sd / - S.Srinivasan



Please Renew Subscription to Madhuramurali

**ஏப்ரல் 20** – பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீகிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்களின் 80வது ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு ஏழை, எளியோருக்கான மருத்துவ சேவை வழங்கும் பொருட்டு, ஸ்ரீபகவன்னாம போதேந்திராள் ஔஷதாலயம் **(Clinic),** ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்ட் சார்பில் கோவிந்தபுரத்தில் புதிதாக கட்டப்பட்டு உள்ளது. இந்த ஔஷதாலயத்தை பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**மார்ச் 30** – மாங்காடு அருகே கொல்லாச்சேரி கிராமத்தில் 48 நாள் நடைபெற்ற அகண்ட நாமகீர்த்தனத்தின் பூர்த்தியில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள்.

**ஏப்ரல் 11 – 19** – சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு ராமாயண மூலபாராயணம் நடைபெற்றது. மாலை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ராமாயண உபன்யாசம் செய்தருளினார்கள். உபன்யாச பூர்த்தி ஸ்ரீபுவனசுந்தர கனபாடிகளால் செய்யப்பட்டது.

**ஏப்ரல் 14** – சென்னை ப்ரேமிகபவனத்தில் தமிழ் புத்தாண்டன்று ஏராளமானோர் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ஆசி பெற்று சென்றனர். மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் சன்னதியில் விஷுக்கனி தரிசனம் இருந்தது. மாலையில் கல்யாண உற்சவம் நடைபெற்றது. கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமார் சன்னதியில் லக்ஷ தீபம் ஏற்றப்பட்டது. திரளான அன்பர்கள் கலந்து கொண்டனர்.

**ஏப்ரல் 15** – தஞ்சாவூர் ஸ்டேட் பாங்க் காலனி பிள்ளையார் கோவிலில், ஆஞ்சநேயர் பிரதிஷ்டையை முன்னிட்டு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் திரளான அன்பர்கள் முன்பு சுந்தர காண்டம் உபன்யாசம் செய்தருளினார்கள்.

**ஏப்ரல் 18** – ஸ்ரீரங்கத்தில், ரங்கநாதரின் பூச்சாடல் உற்சவத்தை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தரிசனம் செய்தார்கள். நாகைநல்லூரில் ஸ்ரீராமநவமியை முன்னிட்டு, ஒரு பஜனை மடத்தில் ராமநவமி உத்ஸவத்தை துவக்கி வைத்து, உபன்யாசம் செய்தருளினார்கள்.

**ஏப்ரல் 24–30** – ஸ்ரீபெங்களூர் கல்கரே கிராம ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில், ஹனுமாரின் பிரதிஷ்டா தினத்தை ஒட்டி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பக்தவிஜயம் உபன்யாசம் செய்தருளினார்கள். திரளான



Please Renew Subscription to Madhuramurali

அன்பர்கள் வந்து சிரவணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**மார்ச் – ஏப்ரல் –** ராமானுஜம்ஜி சென்னை, பம்பாய் மற்றும் மத்திய கிழக்காசிய நாடுகளில் பல சத்சங்கங்களையும் தொழில் நிறுவனங்களில் பணிபுரிவோருக்கான பயிற்சி முகாம்களையும் நிகழ்த்தினார்.

**மார்ச் – ஏப்ரல் – ஆஸ்திரேலியா** மற்றும் **நியூசிலாந்து** நாடுகளில் சத்சங்கங்கள் நிகழ்த்த பூர்ணிமாஜி சென்றிருந்தார். நியூசிலாந்து வெலிங்டனில் மார்ச் 29 – ஏப்ரல் 1 வரை "ராமாயணத்திலிருந்து ரத்தினங்கள்" என்ற தலைப்பில் குறிஞ்சி முருகன் கோவிலில் உபன்யாசம் செய்தார். அதே கோவிலில் பூர்ணிமாஜி முன்னிலையில் ஏப்ரல் 6 முதல் பாகவத சப்தாஹம் விமரிசையாக நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பாகவத அர்ச்சனை ஸத நாமாவளி கொண்டு அர்ச்சனையும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள் அடங்கிய மதுர கீதமும் குழந்தைகளின் நாட்டியமும் இடம் பெற்று இருந்தது. ருக்மிணி கல்யாண வைபவமும், மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையும், ஸ்ரீப்ரேமிகவரதன் மற்றும் கோவிலில் உள்ள ராதாகிருஷ்ண மூர்த்திகளுடன் கோவிலை வலமாக வந்து மஹாமந்திர கீர்த்தனமும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளை நியூசிலாந்து "காட்" சத்சங்கத்தை சேர்ந்த திரு.விஜய், திருமதி.பவித்ரா விஜய் மற்றும் பலர் மிக அழகாக ஏற்பாடு செய்து இருந்தனர். **ஏப்ரல் 14 முதல் 20** – பல இடங்களில் ராமநவமியை முன்னிட்டு, நியுசிலாந்து **ஆக்லாந்தில்** சபரிமோக்ஷம், விபீஷண சரணாகதி, சுந்தர காண்டம் குறித்து பூர்ணிமாஜி உபன்யாசம் செய்தார். தினமும் நூற்றுக்கும் மேலாக கலந்து கொண்ட இந்த சத்சங்கங்களின் பூர்த்தி சீதா கல்யாணத்துடன் அழகாக நிறைவு பெற்றது. மேலும் பல சத்சங்கங்களில் பூர்ணிமாஜி கலந்து கொண்டார்.

**ஏப்ரல் 16 – 23–** வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம் அழகிய ராமர் திருக்கோவிலில், முரளிஜி ஸ்ரீமத் ராமாயணம் உபன்யாசம் செய்தார். தினமும் 150க்கும் குறையாமல் அன்பர்கள் வந்து சிரவணம் செய்து திருவருளும் குருவருளும் பெற்று சென்றனர்.



Please Renew Subscription to Madhuramurali

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



*- ஜனனி*

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -5

மெஜிஸ்ட்ரேட்டை உலக வாழ்வு எனும் சிறையில் அனந்தகாலமாக தண்டனையை அனுபவித்து வரும், ஒரு அபராதியாக உணர வைக்கவும் செய்தார் பாபா. பாபாவின் பேச்சு மெஜிஸ்ட்ரேட் ஹ்ருதயத்தில் மின்னல் போன்ற தாக்குதலை உண்டாக்கியது. அவரது மோஹ இருள் நீங்கியது. இந்த ஸம்ஸாரமே ஒரு சிறை என்று அவருக்கு தெளிவாக தெரிந்தது. பாபாவிடம் த்வேஷம் விலகி, அது படிப்படியாக சிரத்தையாக மாறியது. அக்கணமே, அவர் ப்ருந்தாவனத்தில் சில நாட்கள் தங்கி பாபாவுடன் ஸத்ஸங்கம் செய்வது என்ற முடிவெடுத்தார்.

பல நாட்கள் பாபாவின் ஸத்ஸங்கத்தாலும் ப்ரவசனத்தாலும், அவர் ஹ்ருதயத்தில் நல்ல தெளிவும் மாற்றமும் ஏற்பட்டது. தனது கண்ணீரினாலேயே, பாபாவின் சரணங்களை அலம்பியவாறே அவர் கூறலானார், "பாபா! தங்களிடம் நான் பெரிய அபராதம் செய்துவிட்டேன். என்னை மன்னித்து என் மீதும் க்ருபை செய்ய வேண்டும். பவ-பந்தத்திலிருந்து நான் விடுபட வேண்டும். மேலும் ராதா-க்ருஷ்ண சரணத்தை நான் அடைய வேண்டும் என்று தாங்கள் அருள வேண்டும்" என்றார். பாபா அருள் புரிவதில் சற்றும் தாமதிக்கவில்லை. மெஜிஸ்ட்ரேட்டும் பாபாவிடம் தீக்ஷை பெற்று, பஜனையில் ஈடுபடலானார். வ்ரஜத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் இவ்வாறு ஸந்யாஸம் பெற்றுக் கொண்டது ஒரு அபூர்வமான ஸம்பவமாக போற்றப்பட்டது.

கோபாலீமா, கோவர்தனத்தில் தீவிரமான வைராக்யத்தோடு பஜனை செய்யலானாள். மஹாவாணீ என்ற க்ரந்தத்தை அவர் மிகவும் ரஸித்தார். அதனை நித்யமும் ப்ரேமையுடன் பாராயணம் செய்து கொண்டு, கோபால மந்திரத்தை ஜபம் செய்து வந்தாள். ஜபம் செய்து கொண்டே



Please Renew Subscription to Madhuramurali

வந்ததில் அவளுக்கு கோபால மந்திரத்தின் ஸித்தி ஏற்பட்டு ராதா-க்ருஷ்ண தரிசனமும் ஏற்பட்டது.

ஒரு நாள் ஒரு கீழ்த்தரமான மனிதன் கோபாலீமாவை பார்த்துவிட்டான். தக்க தருணத்தை எதிர்பார்த்து, அவளது குடீரத்திற்குள் புகுந்து விட எண்ணினான். யாரும் அவளுடன் இல்லை என்று அவன் எண்ணினான். பக்தவத்ஸலனான பகவான் ஏதாவது ஒரு ரூபத்தில் தன் பக்தர்களை காப்பாற்ற எப்பொழுதும் அவர்கள் அருகிலேயே இருப்பான் என்று அந்த மூடன் எவ்வாறு அறிவான்? அவன் குடிசையின் வாயிலை நெருங்கும்பொழுது ஒரு மாபெரும் ஸிம்மம் பெரிய கர்ஜனையுடன் தன்னை நோக்கி பாய்ந்து வருவதைக் கண்டு அக்கணமே பயத்தில் மயக்கமடைந்து விட்டான். இச்சம்பவத்திற்கு பின் கோபாலீமா ஸ்ரீஹம்ஸதாஸ்ஜீ அவர்களின் சிஷ்யரான ஸ்ரீலாட்லீதாஸ்ஜீ அவர்களின் இல்லத்தின் ஒரு அறையில் வஸிக்க ஆரம்பித்தார். தனது வாழ்க்கையின் மிகுந்த நாட்கள் இங்கிருந்து பஜனை செய்தபடியே கழித்தார்.

பாபா ஹம்ஸதாஸ்ஜி பர்ஸானாவில் மதுகர வ்ருத்தியில் இருந்து கொண்டு பஜனை செய்து வந்தார். அவ்வப்பொழுது தனது குருநாதரை தரிசிப்பதற்காக ப்ருந்தாவனம் செல்வார். குருதேவரிடமிருந்து அவர் பக்தமால் மற்றும் பாகவதம் அத்யயனம் செய்தார்.

பாகவதத்தை மனப்பாடம் செய்ய வேண்டும் என்று அவர் மிகவும் விரும்பினார். ஆனால் இது அவ்வளவு எளிதான காரியமா என்ன? இது ஸாத்யமாக வேண்டுமென்று அவர் ஸ்ரீராதையிடம் ப்ரார்த்தனை செய்யலானார். ஒரு முறை ஒரு பரிச்சயமில்லாத அழகிய சிறுமி அவரை அணுகி அவரிடம், "பாபா, வாயை திற!" என்று கூறினாள். அவரும் மந்திரத்திற்கு கட்டுப்பட்டார்போல் வாயை திறந்தார். சிறுமியும் அவரது நாவில் ஏதோ எழுதினாள். அவள் அவ்வாறு எழுதிய அடுத்த க்ஷணம், அவர் உடம்பில் ப்ரேமாவேசம் ஏற்பட்டு மூர்ச்சையானார். அந்த நிலையில் ஒரு ஸ்வப்னத்தில், ஸ்ரீராதை அவரிடம், "நான் உன் நாவில் எழுதிவிட்டேன். உனக்கு பாகவதம் மனப்பாடம் ஆகும்" என்று கூறி மறைந்தாள். அப்பொழுதிலிருந்து அவருக்கு பாகவதம் கண்டஸ்தமாகி விட்டது. (தொடரும்)



Please Renew Subscription to Madhuramurali

# *மாலே மணிவண்ணா – 117*

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்



உலகை தாங்கி நிறுத்தி பாதுகாக்கும் மலைகள் பலவாயினும், அப்பலவற்றுள்ளும், நிலத்துள்ள மக்களின் பசி வம்மையை போக்கி, உணவும் மருந்துமாக பயன்படும், நிறை பயன்கள் எல்லாவற்றையும், எப்பொழுதும் மக்கள் பெறும்படியாக பயன்படும் மலைகள் சிலவே. கங்கை, காவேரி, கோதாவரி என்ற புண்ணிய நதிகளின் தோற்ற இருப்பிடமாக இருக்கும் மலைகளும், மற்ற மலைகளும் ஒன்றாகி விடுமா? பெருநதிகள் நீண்ட தூரம் ஓடி, நீண்ட காலம் நீரை தந்து பயிர்களை பாதுகாத்து, உயிர்களை வளர்க்கின்றன. அவற்றையே,

*பலவினும் – நிலவரை ஆற்றி நிறைபயன் ஒருங்குடன்*

*நின்று பெற நிகழும் குன்று அவை சிலவே –*

இப்படிப்பட்ட ஒரு சில மலைகளிலும் சிறந்து நிற்கும் சில மலைகள் உள்ளன. அவை, தெய்வங்கள் தாமாக விரும்பி, இடங்கொண்ட மலைகள் ஆகும். புதுமலர் பூத்து விளங்கும் தடாகங்களும் உடையனவாய், மேகம் படியும் உயர்ந்த உச்சியை உடைய குலவரைகள் என்று போற்ற பெறும் அத்தகைய மலைகள் மேலும் சிறந்தன ஆகும்.

*சிலவினும் சிறந்தன தெய்வம் பெட்புறும்*

*மலர் அகன் மார்பின் மைபடி குடுமிய*

*குலவரை சிலவே –*

திருமலை, திருநீர்மலை முதலிய திவ்ய தேசங்களை நினைத்துப் பாருங்கள். என்றும் நின்று பயன் தரும் எம்பெருமானை தாங்கி நின்று மண்ணுள்ளோரை வருக வருக என்று நாளும் அழைத்து நல்லருள் நல்கும் இத்தகைய திருப்பதிகள் சிறந்தன என்று சொல்லவும் வேண்டுமோ?

*குலவரை சிலவினும் சிறந்தது*



Please Renew Subscription to Madhuramurali

*கல்லறை கடலும் கானலும் போலவும்*

*எல்லாம், வேறு வேறு உருவின் ஒரு தொழில் இருவர்த்*

*தாங்கும் நீள்நிலை ஓங்கு இருங்குன்றம்* – இத்தகைய திருப்பதிகளுள்ளும் மிகவும் சிறந்தது - கல்லென்று ஒலிக்கும் கடலும், கடற்கரை கானலாகிய மணல்வெளியும் போல், நீல நிறமும் வெள்ளை நிறமும் உடைய வேறு வேறாகிய நிறம் உடைய நிறத்தினை உடையவர்கள் ஆயினும், உலகை காத்தலாகிய தொழிலையே ஒன்றாக செய்யும் இருவர். சொல்லும் பொருளுமே போல, வேறுபடாத இருபெருங் கடவுளர் ஆகிய கண்ணபிரானையும், பலராமனையும் தாங்கி நிற்கின்ற நீண்ட நிலைமையினை உடைய புகழால் உயர்ந்த இருங்குன்றம் மிக சிறந்தது ஆகும்.

மாயோன் ஆகிய கண்ணனும், அவன் முன்னோன் ஆகிய பலராமனும் நிறத்தால் வேறுபட்டவர்கள். ஆனால் உலகம் காக்கும் செயலால் வேறுபட்டவர்கள் அல்லர். அதனால் ஒரு தொழில் இருவர் என்றார். பலராமன் ஆண்சக்தி, கண்ணன் பெண்சக்தி ஆற்றலும் அருளும் நிறைந்ததே இறைவன் ஆகும்.

ஆற்றல் இல்லாத அருளும், அருள் இல்லாத ஆற்றலும் இரண்டும் ஒவ்வொரு வகையில் துன்பம் தருவன ஆகும். வறுமையால் வாடி, வந்து இரப்போரை பார்த்து, இரங்குகின்றபோது, அவர்தம் வறுமையை தீர்க்கும் ஆற்றல் நமக்கு இல்லையானால், அந்த இரக்கமாகிய அருள் என்ன பயனை செய்யும்? செல்வத்தாலும் உடல் வலிமையாலும் சிறந்த ஆற்றல் உடையவர்களாய் இருந்தாலும், அருள் என்னும் இரக்கம் இருந்தால்தான், அவர் செல்வமும் வலிமையும் பிறருக்கு தேவை உள்ள இடத்தில் பயன்படும். அப்படி பிறர் நலத்துக்கு பயன்படாத ஆற்றல், அவர்களது அகங்காரத்தை செருக்கை அதிகரிக்க செய்து, உலகிற்கு கேடு செய்ய பயன்படும். இதனாலேயே இறைவன், அருளும் ஆற்றலும் உடையவனாக கூற பெறுகிறான்.

சைவ சமயத்தில் ஆற்றலை சிவமாகவும், அருளை சக்தியாகவும் கூறி இருவரும் தம்முள் பிரிப்பில்லாதவர் என்று சொல்வதும் இங்கு கருதுதல் நலம் தரும். (தொடரும்)



Please Renew Subscription to Madhuramurali

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் - 15

பசவர் எல்லோருக்கும் சிவனாரை உபாசிக்கும் முறையை சொல்லி கொடுத்தார். சிவனார் எப்பொழுதும் உடன் இருக்கிறார் என்கிற பாவமும், மானசீகமாக வணங்குவதும், செய்யும் தொழிலையே சிவனாருக்கு கைங்கரியமாக அர்ப்பணிப்பதும், இலகு பூஜையும், இறைவன் முன் அனைவரும் சமம் என்பதுதான், அவர் உபதேசம் செய்தது.

பசவர் பின்னே வந்தது செருப்பு தைப்பவர், தையல்காரர், மர வேலை செய்பவர் முதற்கொண்டு தோட்டக்காரர் மற்றும் வணிகரிலிருந்து அந்தணர் வரையிலுமாம். அனைவரையும் கலந்து பழகவும் வைத்த அவர், அதன் மூலம், அவர்களுக்குள் இருந்த ஏற்றத்தாழ்வுகளையும் விலக்கி, பக்திக்கே பிரதானம் அதிகமாக தந்தார். தீயகுணம் உடையவனே விலக்க தக்கவன் என்று ஆழமாக தனது அடியார்களிடம் சொல்லி வந்திருந்தார். இது தவிர பக்தி என்றால் என்ன என்பதற்கு ஒரு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டி, தன் பின் வந்தோரையும் பக்தி செய்ய வைத்தார். அவர்கள் வாழும் சூழ்நிலையையும், தரத்தையும் பல வகையில் மாற்றி உயரச் செய்தார்.

மந்திரி என்கிற பதவியில் இருந்து கொண்டு, நிர்வாகத்தில் வியத்தகு மாற்றமும், தனி மனிதராக இருந்து கொண்டு அவ்வப்பொழுது தனிமையில் தவத்தில் காலம் கழிப்பதையும், அவர் செய்ய தவறவே இல்லை. முக்கியமாக சோம்பேறிகளை எப்படி உழைக்க வைப்பது; புறம்போக்கு நிலங்களை விவசாயத்திற்கு மாற்றுவது; பளுவில்லாமல் வரி விதிப்பது எல்லாம் அவர் கொண்டு வந்தார்.

ஏராளமானோர் பசவரிடம் உபதேசம் பெற்றனர். இது வளர்ந்து வளர்ந்து பெரிதாக பரவியது. அவர் ஒரு கட்டத்தில் கூட்டம் கூட்டமாகவே உபதேசம் தர ஆரம்பித்தார். பழமையில் அர்த்தமின்றி பிடிப்பு கொண்டோருக்கு மட்டும் இது பிடிக்காமல்



Please Renew Subscription to Madhuramurali

போனது; மீதி அனைவருக்கும் பிடித்தே இருந்தது.

பசவருக்கு எதிராக அரசாங்கத்தில் செயல்பட்டு வந்தவர்கள் எல்லாம் மலைத்து போயினர். பொறாமையும் கொள்ளலாயினர். மன்னனிடம் அவரை பற்றி கோள் சொல்லவும் செய்தனர். மன்னனுக்கோ, பசவரை பற்றி நன்கு தெரிந்து இருந்ததால், அவருக்கு ஆதரவு தந்து கொண்டே இருந்தான்.

பசவரிடம் இருந்த பக்தர்கள் ஒன்றாக குழுமி அன்னதானமும் அவருடன் சத்சங்கமும் செய்யலாயினர். ஒவ்வொருவரின் வாழ்க்கை தரமும் உயர்ந்து இருந்ததால், அவரிடம் இருந்த அனைவராலும், மேலான கருத்துக்களில், மனதை செலுத்த முடிந்தது. பசவருக்கு ராஜாங்கத்தில் கொடுத்திருந்த பெரிய வீட்டில் எப்பொழுதும் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. சத்சங்கம் நித்யம் களை கட்டி வந்தது. தினமும் பழைய கன்னட பக்தர்களின் சரித்திரங்களும், கவிதைகளும், பசவரின் வசனங்களும் அரங்கேறும். பச்வரை பார்க்க பலதரப்பட்டவரும் வருவர். பசவரின் மேல் கோபம் கொண்டு வருபவர்களையும், அவரை தாக்க வந்தவர்களையும் கூட, பசவர் மரியாதையுடன் நடத்துவார். அவரை பார்த்தவுடன், அவர்களும் மாறி விடுவர். ஆனால் பசவர் தனது மகிமைகளை மறைத்தே வைத்து கொண்டிருந்தார்.

கூட்டம் அதிகமாகவே, அன்பர்கள் ஒன்று கூடி, பக்தர்களின் அனுபவங்களை அனுபவிக்க என்று அழகிய மண்டபம் ஒன்றை அமைத்தனர். அதற்கு அனுபவ மண்டபம் என்று பெயர் வந்தது. தலைவராக அதில் உட்கார தகுந்த ஒருவர் தேவைப்பட்டது. அப்பொழுது, ஸ்ரீசைலத்தில் இருந்த அல்லமபிரபுவிற்கும் பசவரை பார்க்க தோன்றியது.

அதே சமயத்தில் பசவரின் கனவில் அடிக்கடி ஒரு பெரிய ஜோதி தரிசனம் ஏற்பட்டு கொண்டிருந்தது. அது வந்தபொழுதெல்லாம் பசவர் சந்தோஷப்படுவார். "அல்லமர் வர போகிறார்" என்று சொல்லிய வண்ணம் இருப்பார். வந்த அல்லமரோ, பசவரையும் சோதிக்காமல் விடவில்லை.

(தொடரும்)



Please Renew Subscription to Madhuramurali

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / D.D. in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***

* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.

**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | மே 6, 21 ஜூன் 4,19 |
| மே 1 | மாலை - கடலூர் ராமர் கோவில் பஜனை மடம் |
| மே 4 | அப்பர் விழா - குடியாத்தம் |
| மே 19 | மதுரை அருகே காரியாப்பட்டி ஸ்ரீகிருஷ்ணர் கோவில் கும்பாபிஷேகம் |
| மே 28 | கோபகுடீரம் ஆண்டு விழா சென்னை |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



Please Renew Subscription to Madhuramurali